தினமலர்
நிறுவனர்: டி.வி.ராமசுப்பையர்

இன்றைய வேளாண் செய்திகள்

25.09.2012 P.M

26.09.2012 A.M

| 26th Sep 20012 | திருத்தியமைக்கப்பட்ட பயிர் காப்பீட்டு திட்டத்தில் இன்று விழிப்புணர்வு முகாம் |
|---|---|

நாமக்கல்: "திருத்தியமைக்கப்பட்ட பயிர் காப்பீட்டு திட்டத்தில், கபிலர்மலை வட்டாரம், சுல்லிபாளையத்தில், விழிப்புணர்வு முகாம் இன்று நடக்கிறது' என, வேளாண் உதவி இயக்குனர் தங்கராஜூ தெரிவித்துள்ளார்.
அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:திருத்தி அமைக்கப்பட்ட பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ், கபிலர்மலை வட்டாரத்தில் சுல்லிபாளையம், பெருங்குறிச்சி கிராமங்கள் நிலக்கடலை பயிருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. தற்போது, நிலக்கடலை சாகுபடி செய்துள்ள விவசாயிகள், திருத்தியமைக்கப்பட்ட பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் சேர்ந்து பயன்பெற, இன்று, யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனம் மற்றும் வேளாண் துறை மூலம் சுல்லிபாளையம் பஞ்சாயத்து அலுவலகத்தில், விழிப்புணர்வு முகாம் நடக்கிறது.காப்பீட்டுத் திட்டத்தில் பயிர்க்கடன் பெறாத விவசாயிகள் கலந்து கொண்டு, சாகுபடி செய்துள்ள நிலக்கடலை பயிருக்கு பிரீமியம் செலுத்தி, பயிர்களை காப்பீடு செய்து கொள்ளலாம். செலுத்த வேண்டிய பிரீமியத்தொகையில், 50 சதவீதம் அரசு மானியம். மீதமுள்ள, 50 சதவீதம் பிரீமியத்தொகையை விவசாயிகள் நேரடியாக முகாமில் செலுத்தி காப்பீடு செய்து கொள்ளலாம்.நிலக்கடலைப் பயிருக்கு, உத்திரவாத மகசூல் மதிப்புக்கு, 3.5 சதவீதம் பிரீமியம் செலுத்தினால் போதும். காப்பீட்டுத் திட்டத்தில் பயன்பெற வரும் விவசாயிகள், வி.ஏ.ஓ.,விடம் பயிர் சாகுபடி செய்தமைக்கான அடங்கல், வங்கிக்கணக்கு புத்தகத்தின் ஜெராக்ஸ் மற்றும் சிட்டா ஆகிய ஆவணங்களுடன் வர வேண்டும். பிரீமியம் செலுத்த கடைசி நாள் செப்டம்பர், 30ம் தேதி.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

| 26th Sep 20012 | விவசாயிகள் குறை தீர்வு கூட்டம் |
|---|---|

காஞ்சிபுரம் : காஞ்சிபுரம் மாவட்ட விவசாயிகள் குறை தீர்வு கூட்டம், நாளை (27ம் தேதி) நடைபெறும் என, அறிவிக்கப்பட்டுள்ளது. இம்மாத கூட்டம், நாளை காலை, 11 மணிக்கு, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலகத்தில் நடைபெறும். மாவட்ட ஆட்சித் தலைவர் சித்ரசேனன் தலைமை தாங்க உள்ளார். கூட்டத்தில், விவசாயிகள் கலந்து கொண்டு, தங்களுடைய கோரிக்கை மனுக்களை அளிக்கலாம். தங்கள் கருத்துக்களையும் தெரிவிக்கலாம்

| 26th Sep 20012 | ஒருங்கிணைந்த பண்ணையத் திட்டத்தில் விவசாயிகளுக்கு இலவச கால்நடைகள் |
|---|---|

விழுப்புரம்:ஒருங்கிணைந்த பண்ணையத் திட் டத்தின் கீழ் விவசாயிகளுக்கு இலவச கால்நடைகள் வழங்கப்படுகிறது.இது குறித்து கோலியனூர் வேளாண்மை உதவி இயக்குனர் செல்வ சேகர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:தமிழ்நாடு அரசு வேளாண்மைத் துறையின் மூலம் விவசாயிகளின் ஆண்டு நிகர வருமானத்தை பெருக்கும் வகையில் ஒருங்கிணைந்த பண்ணையத் திட்டத்தை செயல்படுத்தப்பட உள்ளன.இத்திட்டம் கோலியனூர் வட்டாரத்தில் புன்செய் நிலத்தில் அதிக பரப்பளவில் சாகுபடி செய்யும் ஏதேனும் ஒரு கிராமத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளன.

இத்திட்டத்தின் கீழ் 50 சதவீதம் மான்யத்தில் இரண்டரை ஏக்கர் பரப்பளவில் செயல்விளக்கமும், 2 கறவை மாடுகள், 12 கோழிகள் மற்றும் தேனீக்கள் வளர்க்கும் பெட்டிகள் வழங்கப்பட உள்ளன.இத்திட்டத்தின்கீழ் பயன்பெற விரும்பும் விவசாயிகள் தங்கள் நிலத்தின் விவரம், வாக்காளர் அடையாள அட்டை, ரேஷன் கார்டு நகல் ஆகியவற்றுடன் வரும் 10ம் தேதிக்குள் கோலியனூர் வேளாண்மை விரிவாக்க மையத்தில் பதிவு செய்திட வேண்டும். இத்திட்டத்தின் குழு அலுவலர்கள் விவசாயிகள் தெரிவிக்கும் விவரங்களின் அடிப்படையில் வயல்களை ஆய்வு செய்து, தகுதியுள்ள பயனாளிகள் தேர்வு செய்யப்படும்.இத்திட்டத்தின் கீழ் பயன் பெறும் விவசாயிகள் தொடர்ந்து 5 ஆண்டுகளுக்கு வேளாண் துறை அலுவலர்கள் மூலம் கண்காணிப்பு செய்யப்படுவர்.அப்போது விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட கறவை மாடுகள், கோழிகள் மற்றும் தேனீக்களை அதிகாரிகள் நேரில் பார்வையிடுவார்கள்.
இத்திட்டம் குறித்து மேலும் தகவல் பெற விரும்புவோர் 94445 73720 என்ற மொபைல் எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்.இத்தகவலை கோலியனூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் செல்வசேகர் தெரிவித்துள்ளார்.

## 26th Sep 20012 இல்லோடு கிராமத்தில் விவசாயிகளுக்கு பயிற்சி

செஞ்சி:இல்லோடு கிராமத்தில் நீர்வள-நிலவள திட்டத்தில் விவசாயிகளுக்கு பயிற்சி முகாம் நடந்தது.ஊராட்சி தலைவர் ராஜாராம் தலைமை தாங்கினார். வேளாண் அலுவலர் கோவிந்தராஜ் வரவேற்றார். வேளாண் உதவி இயக்குனர் ரவீந்திரன் சிறப்புரை நிகழ்த்தினார்.இதில் தழை உரப்பயிர் பயிரிட்டு, மடக்கி உழுவதால் தழைச்சத்து மண்ணில் நிலைத்து நெல் பயிருக்கு கிடைக்கிறது. இதனால் யூரியா உரத்தின் பயன்பாட்டை பாதியாக குறைக்கலாம் என வலியுறுத்தினர்.நீர்வள-நிலவள திட்ட நீர் பாசன சங்க தலைவர் சோமசுந்தரம், உதவி வேளாண் அலுவலர்கள் ரவி, ஞானவேல் ஆகியோர் கலந்து கொண்டனர்.கோனோவீடர் களைக்கருவியை விவசாயிகளுக்கு வழங்கி, செயல் விளக்கம் அளித்தனர். இதில் 20 விவசாயிகள் பங்கேற்றனர்.

## 26th Sep 20012 ஒரு கோடி ரூபாய்க்கு மஞ்சள் ஏல விற்பனை

சேலம்: சேலம் வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தில், நேற்று நடந்த மஞ்சள் ஏலத்தில், ஒரு கோடி ரூபாய்க்கு விற்பனை நடந்தது.சேலம், லீபஜார் பகுதியில் உள்ள சேலம் வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், வாரந்தோறும் செவ்வாய்க்கிழமை, மஞ்சள் மற்றும் நிலக்கடலை ஏலம் நடந்து வருகிறது.நேற்றைய ஏலத்தில், 2,400 மூட்டை மஞ்சள் வரத்தானது. குண்டு மஞ்சள் குவிண்டாலுக்கு குறைந்தபட்சமாக, 5,500 ரூபாய், அதிகபட்சமாக, 6,100 ரூபாய் விற்பனையானது. விரலி மஞ்சள் குறைந்தபட்சம், 6,400, அதிகபட்சம், 7,100, பனங்காலி மஞ்சள் குறைந்தபட்சம், 10 ஆயிரத்து 900, அதிகபட்சம், 12 ஆயிரத்து, 200 ரூபாய்க்கு விற்பனையானது. மொத்தம், ஒரு கோடியே ஐந்து லட்சம் ரூபாய்க்கு மஞ்சள் ஏலம் நடந்தது.நிலக்கடலை ஏலத்தில் மொத்தம், 1,600 மூட்டை வரத்தானது. 60 கிலோ எடை கொண்ட ஈரக்கடலை மூட்டை, 1,300 முதல், 1,591 ரூபாய் வரைக்கும், காய்ந்த நிலக்கடலை மூட்டை குறைந்தபட்சம், 2,300 முதல், 2,465 வரைக்கும் விற்பனையானது.

## 26th Sep 20012 கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி முகாம்

வாழப்பாடி: வாழப்பாடி அடுத்த சிங்கிபுரம் கிராமத்தில், அனைத்து கால்நடைகளுக்கும் தடுப்பூசி போடும் சிறப்பு முகாம் நடந்தது.தமிழகம் முழுவதும், கால்நடைகளை பாதிக்கும் கோமாரி நோயை முழுமையாக கட்டுப்படுத்தும் நோக்கில், சிறப்பு முகாம்கள் நடத்துமாறு தமிழக அரசு உத்தரவிட்டது. அதனையடுத்து, கால்நடை பராமரிப்புத்துறை சார்பில், கிராமங்கள் தோறும் சிறப்பு முகாம்கள் அமைத்து, அனைத்து கால்நடைகளுக்கும் ஒரே நேரத்தில், தடுப்பூசி போடப்பட்டு வருகிறது.வாழப்பாடி பஞ்சாயத்து யூனியன், சிங்கிபுரம் பஞ்சாயத்துக்கு உட்பட்ட

சிங்கிபுரம், பழனியாபுரம், சின்ன பழனியாபுரம், காலனிக்காடு, மேலக்காடு, கூத்தாண்டார்குட்டை, கிழக்குகாடு, சந்தைத்திடல், புதுக்காலனி ஆகிய இடங்களில், ஒரே நேரத்தில் தடுப்பூசி முகாம்கள் நடத்தப்பட்டது.முகாமிற்கு, சேலம் மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் சதீஸ்குமார் தலைமை வகித்தார். வாழப்பாடி பஞ்சாயத்து யூனியன் சேர்மன் அனிதா வரவேற்றார். இணை இயக்குநர் பாலசுப்ரமணியம், துணை இயக்குநர் சுந்தரராஜன், உதவி இயக்குநர்கள் கோவிந்தசாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.கால்நடை மருந்தக டாக்டர்கள் முருகன், குமார், ஆவின் டாக்டர் ராஜ்குமார், உதவியாளர்கள் ரங்கநாதன், நந்தக்குமார், ஈஸ்வரமூர்த்தி, கண்ணன், ராஜேந்திரன் ஆகியோர் கொண்ட மருத்துவக்குழுவினரால், ஒரே நேரத்தில், 1,800 மாடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டது.

| 26th Sep 20012 | வேளாண் அதிகாரி தகவல் சின்ன வெங்காயம் விதைகள் 50% மானியத்தில் வழங்கல் |
|---|---|

நாமக்கல்: "ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தில், 50 சதவீத மானியத்தில், சின்ன வெங்காய விதைகள் வழங்கப்படுகிறது' என, எலச்சிபாளையம் தோட்டக்கலை உதவி இயக்குனர் மாலினி தெரிவித்துள்ளார்.அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:நாமக்கல் அடுத்த எலச்சிபாளையம் வட்டாரத்தில், தோட்டக்கலைத் துறை மூலம் ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தில், 2012-13ம் ஆண்டுக்கு விவசாயிகளுக்கு, 50 சதவீதம் மானியத்தில் வழங்க, சின்னவெங்காயம் (கோ5) ரக விதைகள், சிறுகீரை, சிகப்பு மற்றும் பச்சை ரகம் இருப்பில் உள்ளது.சின்னவெங்காயம் (கோ5) விலை கிலோ, 2,000 ரூபாய். 50 சதவீதம் மானியம். சிறுகீரை (சிகப்பு மற்றும் பச்சை) விலை கிலோ, 155 ரூபாய். மானியமாக கிலோவுக்கு 77.50 ரூபாய் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். அதிக பட்சமாக ஒரு விவசாயிக்கு, 0.50 ஹெக்டேர் பரப்புக்கு உண்டான விதைகள், 50 சதவீதம் மானியத்தில் வழங்கப்படும்.இத்திட்டத்தில் அனைத்து விவசாயிகளும் பயன்பெறலாம்.தாழ்த்தப்பட்ட விவசாயிகளுக்கு சிறப்பு ஒதுக்கீடு உள்ளது. உதவி வேளாண் அலுவலர்கள் மூலமாகவும், ஒவ்வோரு வாரமும் வெள்ளிக்கிழமை, தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவலகத்தை நில ஆவணங்களுடன் அணுகி, விதைகளை பெற்று பயனடையலாம்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

| 26th Sep 20012 | தர்மபுரியில் வெள்ளரி விற்பனை அமோகம் |
|---|---|

தர்மபுரி: தர்மபுரியில் கடந்த சில நாட்களாக கொளுத்தும் வெயிலால், வெள்ளரி விற்பனை அதிகரித்துள்ளது.தர்மபுரி மாவட்டத்தில், பருவ மழை குறைந்ததை அடுத்து கடந்த சில

நாட்களாக வெயிலின் உக்கிரம் அதிகரித்து சராசரி வெயில் அளவு, 95 டிகிரி வரை அடித்து வருகிறது. இதனால், பகல் நேரங்களில் சாலைகள் செல்லும் மாணவர்கள், வாகன ஓட்டிகள், பொதுமக்கள் மிகுந்த அவதிக்குள்ளாகி வருகின்றனர்.கோடை வெயிலை போல் பருவமழை காலத்தில் கொளுத்தும் வெயில் இருந்து தப்பித்துக்கொள்ள பொதுமக்கள் நகரில் ஆங்காங்கே விற்கும் வெள்ளரிக்காய் மற்றும் இளநீர் மற்றும் கரும்பு சாறுகளை அதிகளவில் வாங்கி உண்டும், பருகியும் வருகின்றனர்.இதனால், தர்மபுரி நகரில் கடந்த சில நாட்களாக ஆங்காங்கே வெள்ளரி, இளநீர் விற்பனை அதிகரித்துள்ளது. வெள்ளரி விற்பனை செய்யும் கோவிந்தராஜ் கூறியதாவது:வழக்கமாக செப்டம்பர் மாதங்களில் தர்மபுரி மாவட்டத்தில் பருவமழையின் காரணமாக குளுமையான சீதோஷண நிலை இருக்கும். இந்தாண்டு, வழக்கத்துக்கு மாறாக தட்ப வெப்ப நிலை மாற்றத்தால் வெயில் கொளுத்தி வருகிறது.இதில் இருந்து தங்கள் உடல் நலத்தை பாதுகாத்து கொள்ள பொதுமக்கள் கடந்த சில தினங்களாக இளநீர், வெள்ளரிக்காய் உள்ளிட்டவைகளை அதிகளவில் வாங்கி சாப்பிடுகின்றனர். இதனால், தர்மபுரி நகரில் வெள்ளரிக்காய்க்கு வரவேற்பு ஏற்பட்டுள்ளதை அடுத்து நகரில் 10க்கும் மேற்பட்ட வியாபாரிகள் தள்ளுவண்டியில் வெள்ளி வியாபாரத்தை துவங்கியுள்ளனர். நாமக்கல் பகுதியில் இருந்து வாங்கி வரும் வெள்ளரிக்காய்கள் வாங்கி வரப்படுகிறது.ஒரு கீற்று வெள்ளரி, 5 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. இதை பொதுமக்கள் ஆர்வத்துடன் வாங்கி சாப்பிடுவதுடன் தங்களது இல்லங்களுக்கு வாங்கி செல்கின்றனர்.இவ்வாறு கூறினார்.

| 26th Sep 20012 | தடையின்றி தேயிலை உற்பத்தி செய்ய நடவடிக்கை அவசியம் :"கோட்டா' முறையை தவிர்க்க யோசனை |
|---|---|

மஞ்சூர் : மஞ்சூர் அருகே மேற்குநாடு கூட்டுறவு தேயிலை தொழிற்சாலையில் 25 லட்சம் ரூபாயில் இரண்டு "சிடிசி' இயந்திரம் நிறுவப்பட்ட போதிலும் போதிய திறன் கொண்ட டிரான்ஸ்பார்மர் இல்லாததால் தேயிலை வரத்து அதிகரிக்கும் சமயங்களில் தள்ளாடும் நிலை ஏற்படுகிறது.
மஞ்சூர் அடுத்துள்ள மேற்குநாடு கூட்டுறவு தேயிலை தொழிற்சாலையில் 800க்கு மேற்பட்ட அங்கத்தினர்கள் உள்ளனர்.அங்கத்தினர்கள் வினியோகிக்கும் பசுந்தேயிலை கடந்த பல ஆண்டுகளாக 250 "கேவிஏ' டிரான்ஸ்பார்மர் உதவியுடன் ஒரு "சிடிசி' மெஷினில் அரைக்கப்பட்டு தேயிலை தூள் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு வந்தது.
ஆனால், பசுந்தேயிலை வரத்து அதிகரிக்கும் நேரங்களில் இங்குள்ள டிரான்ஸ்பார்மரால் தேயிலை உற்பத்தி மேற்கொள்ள முடியாமல் தொழிற்சாலை நிர்வாகம் திணறுகிறது. அந்த சமயத்தில் தொழிற்சாலை உறுப்பினர்களிடம் "கோட்டா' முறையில் பசுந்தேயிலை கொள்முதல் செய்யப்படுகிறது. கோட்டா முறை அமுல்படுத்துவதால் குறைந்த அளவே பசுந்தேயிலை வினியோகிக்க முடிகிறது.

இதனால், பெரும்பாலான தோட்டங்களில் பசுந்தேயிலைகளை குறிப்பிட்ட காலத்தில் எடுக்க முடியாமல் போவதால், தேயிலை தோட்டங்களில் உள்ள இலையின் தரம் பாதிக்கப்படுகிறது.
திறன் இல்லை: கடந்த பல ஆண்டுகளாக 250 "கேவிஏ' திறன் கொண்ட டிரான்ஸ்பார்மரால் தேயிலை உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது இரண்டு "சிடிசி' இயந்திரங்கள் நிறுவியதால், ஒரே நேரத்தில் இரண்டு இயந்திரங்களை இயக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கு திறன் அதிகம் கொண்ட டிரான்ஸ்பார்மர் அவசியம். இந்த பிரச்னைக்கு தீர்வு காண வலியுறுத்தி,தொழிற்சாலை உறுப்பினர்கள் மாநில முதல்வர்; கூட்டுறவு இணை இயக்குனர் ஆகியோருக்கு அனுப்பியுள்ள மனு:
தொழிற்சாலையில் இரண்டு "சிடிசி' மெஷின்களை ஒரே நேரத்தில் இயக்க வேண்டும் என்றால், குறைந்தது 500 "கேவிஏ' திறன் கொண்ட டிரான்ஸ்பார்மர் அமைக்க வேண்டும்.
அதிக பசுந்தேயிலை வரும் போது, உற்பத்தியை தடையின்றி மேற்கொள்ள முடியும். இதனால், கோட்டா முறையை தவிர்க்க முடியும்.
எனவே, 500 "கேவிஏ' திறன் கொண்ட டிரான்ஸ்பார்மர் நிறுவ வேண்டும்.இவ்வாறு அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது.

## 26th Sep 20012 | எண்ணெய் வித்துகள் சாகுபடி பயிற்சி முகாம்

மண்ணச்சநல்லூர்: மண்ணச்சநல்லூர் யூனியன் அலுவலக வளாகத்தில், திருச்சி உழவர் பயிற்சி நிலையத்தின் மூலம், விவசாயிகளுக்கான ஐசோபாம் எண்ணெய் வித்துகள் சாகுபடி பயிற்சி நடந்தது.மண்ணச்சநல்லூர் வேளாண்மை உதவி இயக்குனர் ஜெயபாலன் வரவேற்றார். துணை இயக்குனர் பொன்னுசாமி முன்னிலை வகித்தார். இணை இயக்குனர் சேகர் தலைமை வகித்து, பயிற்சியை துவக்கி வைத்து பேசினார்.ஓய்வு பெற்ற வேளாண்மை இணை இயக்குனர் லோகநாதன், எண்ணெய் வித்து பயிர் சாகுபடி பற்றி விவசாயிகளுக்கு பயிற்சியளித்தார். துணை வேளாண்மை அலுவலர் வேலாயுதம், எண்ணெய் வித்து பயிர்பாதுகாப்பு பற்றி விளக்கினார். வேளாண்மை அலுவலர் காசிவிஸ்வநாதன், சாகுபடி தொழில் நுட்பங்களை விளக்கினார். பயிற்சியில், 50 விவசாயிகள் கலந்து கொண்டனர். பயிற்சியில், எண்ணெய் வித்து பயிர்கள் சாகுபடி பற்றி குறும்படம் காண்பிக்கப்பட்டது. உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை அலுவலர் கலைராணி நன்றி கூறினார்.வேளாண்மை உதவி அலுவலர்கள் துரைசங்கர், பாஸ்கர், லெட்சுமணன், ஜீவானந்தம், பிச்சைபிள்ளை, அட்மா தொழில்நுட்ப வல்லுனர்கள் சதீஸ் ஆகியோர் பயிற்சி ஏற்பாடுகளை செய்தனர்.

## 26th Sep 20012 | புதுகையில் விவசாய தொழிலாளர் சங்க கூட்டத்தில் தீர்மானம்

புதுக்கோட்டை: விவசாய தொழிலாளர் சங்க கூட்டத்தில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.புதுக்கோட்டையில் விவசாய தொழிலாளர் சங்கத்தின் மாவட்ட செயற்குழு கூட்டம் நடந்தது. மாவட்டத் தலைவர் மணி தலைமை வகித்தார். செயலாளர் சுந்தரராசன், துணைத் தலைவர் ஜீவாதாசன், துணைச் செயலாளர் முருகானந்தம், பொருளாளர் ராசு உட்பட நிர்வாகிகள் பலர் பங்கேற்றனர்.விவசாய தொழிலாளர் குடும்பங்களுக்கு மாதம், 35 கிலோ ரேஷன் அரிசி வழங்கவேண்டும், நூறு நாள் வேலை திட்டத்தில் தொழிலாளர்களுக்கு முறையாக கூலி வழங்குவதை மாவட்ட நிர்வாகம் உறுதிசெய்ய வேண்டும், வீட்டுமனை கேட்டு விண்ணப்பித்துள்ள அனைவருக்கும் பட்டா வழங்கவேண்டும் உட்பட, கூட்டத்தில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## 26th Sep 20012 | உற்பத்தியை பெருக்க மானியம் வேளாண்துறை அதிகாரி தகவல்

வேதாரண்யம்: சம்பா பருவத்தில் நெல் உற்பத்தியை அதிகரிக்க, மானிய விலையில் வழங்கப்படும் இடுபொருட்களை பெற்று பயனடையுமாறு, வேளாண்துறை விவசாயிகளை கேட்டுக் கொண்டுள்ளது.இதுகுறித்து வேதாரண்யம் வட்டார வேளாண் உதவி இயக்குனர் சந்திரகாசன் வெளியிட்ட அறிக்கை:வேதாரண்யம் வட்டாரத்தில் தற்போது சம்பா சாகுபடி பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது. இதில், நெல் உற்பத்தியை அதிகரிக்க வேளாண்துறை சார்பில் பல்வேறு மானிய உதவிகளை வழங்க அரசு உத்தரவிட்டுள்ளது.அதன்படி நேரடி நெல் விதைப்புக்கு புழுதி உழவுக்கு, ஹெக்டேருக்கு, 1,200 ரூபாய் மானியமும், நெல் விதை, ஒரு கிலோ, 10 ரூபாய்க்கு மானியத்தில் ஹெக்டேருக்கு, 75 கிலோவும், களையை கட்டுப்படுத்த களைக்கொல்லி மருந்துக்கு, ஹெக்டேருக்கு மானியம், 500 ரூபாயும் வழங்கப்படுகிறது.ஏதாவது ஒன்றுக்கு, 75 சதவீத மானியத்தில், ஹெக்டேருக்கு, 25 கிலோ சிம்சல்பேட் உரத்துக்கு, 600 ரூபாய் வீதமும், 12.5 கிலோ நுண்ணூட்ட சத்து உரம், 226 ரூபாய், 85 காசு வீதமும், 500 கிலோ ஜிப்சத்துக்கு 1,312 ரூபாய், 50 காசு வீதமும் வழங்கப்படுகிறது.26 பாக்கெட் உயிர் உரங்களுக்கு ஹெக்டேருக்கு மானியம், 117 ரூபாய் வீதமும், சேற்று உழவு செய்யும் விவசாயிகளுக்கு, ஹெக்டேருக்கு உரத்துக்கு, 25 சதவீத மானியமாக 1,125 ரூபாய் வீதமும் வழங்கப்படுகிறது. இந்த வாய்ப்பை விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

## 26th Sep 20012 காட்டுப்பன்றிகளால் விவசாயநிலங்களில் பயிர்கள் சேதம்

ஆண்டிபட்டி:திம்மரசநாயக்கனூர் மலைப்பகுதியில் இருந்து வரும் காட்டுப்பன்றிகள் விளை நிலங்களில் புகுந்து நாசம் செய்து வருகின்றன. கட்டுப்படுத்த வழி தெரியாமல் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். திம்மரசநாயக்கனூர், டி.பொம்மிநாயக்கன்பட்டி, மல்லையபுரம் பகுதிகளில் நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்கள் உள்ளன. வடக்கு மலை, தெற்கு மலை, கிழக்குமலை, நாழி மலை, பச்சிமலை கரடுகளில் ஏராளமான காட்டுப்பன்றிகள் உள்ளன. தற்போது மலை மற்றும் கரடு பகுதிகளில், கடும் வறட்சி ஏற்பட்டுள்ளது. குடிநீர், இரை கிடைக்காததால் இரவு நேரங்களில் காட்டுப்பன்றிகள் கூட்டமாக வந்து அடிவாரப்பகுதிகளில் விளை நிலங்களில் புகுந்து விடுகின்றன.

விவசாயிகள் பயிரிட்டுள்ள பீட்ரூட், மக்காசோளம், பப்பாளி, நிலக்கடலை பயிர்களை தோண்டி சேதப்படுத்தி விடுகின்றன. விளைநிலங்களை சேதப்படுத்தும் காட்டுப்பன்றிகளை பிடித்தாலோ, கொன்றாலோ வனத்துறையினர் நடவடிக்கை எடுத்து விடுகின்றனர்.சேதம் அடைந்த பயிர்களுக்கு யார் நஷ்ட ஈடு தருவது, என்று விவசாயிகள் கேட்கின்றனர். மலையில் இருந்து விளைநிலங்களுக்குள் காட்டுப்பன்றிகள் வராமல் தடுக்க வேலி அமைக்க வனத்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## 26th Sep 20012 மூணாறு அருகே ஹைடெக் கால்நடை பண்ணை திறப்பு

மூணாறு: மாட்டுப்பட்டியில் ஹைடெக் கால்நடை பண்ணையை, வீடியோ கான்பரன்சிங் முறையில் கேரள முதல்வர் உம்மன்சாண்டி திறந்து வைத்தார்.

மூணாறு அருகே மாட்டுப்பட்டியில், கேரள கால்நடை பாதுகாப்புத் துறை சார்பில் இன்டோ-சுவீஸ் மாட்டு பண்ணை செயல்பட்டு வருகிறது.இங்கு தரம் வாய்ந்த கலப்பு இன காளைகளை உருவாக்கி,பால் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில், தாய் பசுக்கள் பராமரிகக் 8.47 கோடி செலவில், நவீன முறையில், இயந்திரமயமாக்கப்பட்ட "ஹைடெக்' பண்ணை அமைக்கப்பட்டுள்ளது.இதன் திறப்பு விழா நேற்று நடந்தது.

அமைச்சர் மோகனன் தலைமை வகித்தார். அமைச்சர் காசர்கோடு, டார்ப் இன காளைகளின் உயிரணுக்கள் விநியோகத்தை தொடங்கி வைத்தார்.இடுக்கி எம்.பி.,தாமஸ்,எம்.எல்.ஏ.,க்கள் ராஜேந்திரன்,ரோஷி அகஸ்டின்,மாவட்ட பஞ்சாயத்து தலைவர் தாமஸ், கே.எல்.டி., வாரியம் நிர்வாக இயக்குனர் டாக்டர் அனி, எஸ்.தாஸ்,சிறப்பு அதிகாரி டாக்டர் சஜீவ்குமார் உட்பட பலர் பங்கேற்றனர். கேரள முதல்வர் உம்மன்சாண்டி,வீடியோ கான்பரன்சிங் முறையில், பண்ணையை திறந்து வைத்தார்.

| 26th Sep 20012 | செயற்கை முறை நீர் செறிவூட்டல் ரூ.5.60 கோடி செலவில் திட்டம் |
|---|---|

தேனி:தேனி மாவட்டத்தில் நிலத்தடி நீர் மட்டம் குறைந்துவிட்டது. எல்லா இடங்களிலும் 500 அடிக்கு கீழ் சென்றுவிட்டது. நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்த தேனி விவசாய பொறியியல் துறை புதிய திட்ட மதிப்பீட்டை தயாரித்துள்ளது. செயற்பொறியாளர் ராஜா கூறியதாவது: செயற்கை முறையில் நீர் செறிவூட்டும் திட்டத்தில், தடுப்பணைகள் கட்டவும், கசிவுநீர் குட்டைகள் அமைக்கவும் 5.60 கோடி ரூபாயில் திட்டம் தயாரிக்கப்பட்டு அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.தேசிய விவசாய அபிவிருத்தி திட்டத்தில், விவசாய பயன்பாட்டு கருவிகள் மானிய விலையில் வழங்க 3 கோடி ரூபாயில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் தேர்வுப்பணி தற்போது நடந்து வருகிறது. அரசு நிதி ஒதுக்கீடு கிடைத்ததும், நீர் செறிவூட்டும் திட்டப்பணிகளும், விவசாயிகளுக்கு மானியம் வழங்கும் பணிகளும் தொடங்கும், என்றார்.

| 26th Sep 20012 | விவசாயிகளுக்கு ரூ.7 கோடி கடன் |
|---|---|

தேனி:இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, ஆகஸ்ட் மற்றம் செப்டம்பர் மாதங்களை ""விவசாயிகள் மாதமாக" கொண்டாடி வருகிறது. இதையொட்டி தேனி, பெரியகுளம், ஆண்டிபட்டி,லெட்சுமிபுரம் கிளைகள் சார்பாபில், விவசாயிகளுக்கு கடன் வழங்கும் விழா அன்னப்பராஜா நினைவு திருமண மண்டபத்தில் நடந்தது. கலெக்டர் பழனிசாமி தலைமை வகித்து சிறுதொழில்,சுழல்நிதி, மாற்றுத்திறனாளிகள், சிறு தொழில் நிதி உட்பட 252 பயனாளிகளுக்கு 7 கோடி மதிப்பிலான கடன் உதவிகள் வழங்கி கிராம மக்களின் வாழ்வாதரா மேம்பாடு குறித்து பேசினார்.வங்கியின் முதுநிலை மண்டல மேலாளர் (திண்டுக்கல்) கல்யாணசுந்தரம் முன்னிலை வகித்தார். முன்னோடி வங்கி மேலாளர் மகேந்திரன், தேனி ஐ.ஓ.பி., கிளை மேலாளர்கள் வெங்கட்ராமன், சண்முகம், வசந்த மல்லிகா பங்கேற்றார். முதுநிலை மேலாளர் மோகன் நன்றி கூறி னார்.

| 26th Sep 20012 | வைக்கோல் கட்டும் இயந்திரம் அறிமுகம் விவசாய பணியில் புரட்சி |
|---|---|

பூதப்பாண்டி : குமரியில் விவசாயத்தில் அறுவடை இயந்திரம், நடவு இயந்திரத்தை தொடர்ந்து வைக்கோல் கட்டும் இயந்திரமும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

விவசாய பணிக்கு போதிய கூலி ஆட்கள் கிடைக்காத நிலையில் விவசாயம் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டது. இதனைத் தவிர்க்க அறுவடை இயந்திரம் அறிமுகப்படுத்தப்பட்டது. இதனால் அறுவடை செய்யப்பட்ட பதரு நீக்கிய நெல் பிரிக்கப்பட்டு, வைக்கோல் வயல்களிலேயே வியாபாரிகளிடம் கொடுக்கப்படுகிறது. இந்த வைக்கோல் கூலி ஆட்கள் மூலம் கட்டுகளாக்கப்பட்டு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் பிற மாவட்டங்களுக்கும் விற்பனை

செய்யப்படுகிறது.

தற்போது வைக்கோல் கட்டவும், ஆட்கள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ள நிலையில் வைக்கோல் கட்ட இயந்திரம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. சுமார் 11லட்சம் மதிப்புள்ள இயந்திரம் நெல்லை மாவட்டத்திலிருந்து வரவழைக்கப்பட்டுள்ளது. இந்த இயந்திரம் மூலம் ஒரு கட்டுகட்ட சுமார் 30 ரூபாய் வரை கட்டணம் வசூலிக்கப்படுகிறது. நெல் கொள்முதல் செய்யவும், வைக்கோல் வாங்கவும் வியாபாரிகளிடம், போட்டோ போட்டி ஏற்பட்டுள்ளது. 87 கிலோ கொண்ட ஒரு கோட்டை நெல் ரூ.1,400 வரையிலும், வைக்கோல் ஒரு ஏக்கர் சுமார் 4 ஆயிரம் வரையிலும் விலை உள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

# விவசாய மலர் செய்தி

26th Sep 20012 | முற்றிய தேங்காய் தண்ணீரை நுண்ணுயிர் கொண்டு மதிப்பு கூட்டலாம்



தென்னையின் இளநீரும் கொப்பரையும் மனிதனுக்குபல்வேறு நன்மைகளை தரவல்லன. இளநீரில் நோய் எதிர்ப்பு சக்தியும் வளர்ச்சி ஊக்கிகளும் அதிக அளவில் உள்ளதால் இதன் தேவை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் உள்ளது. இது இப்போது பாக்கெட் செய்தும் விற்பனை செய்யப்படுகிறது. ஆனால் முற்றிய தேங்காய் தண்ணீரில் தாது உப்புக்கள் மற்றும் சர்க்கரைச் சத்துக்கள் இருந்தாலும் அவ்வளவாக பயன்படுத்தப் படுவதில்லை. குறிப்பாக, இது திசுவளர்ப்பில் ஊடகம் தயார் செய்வதில் ஒரு முக்கிய இடுபொருளாக உள்ளது.

சராசரியாக ஒரு தேங்காயில் சுமார் 120-150 மில்லி தண்ணீர் இருக்கும். ஒரு நடுத்தர தேங்காய் பதனிடும் தொழிற்சாலையில் நாள் ஒன்றுக்கு 10,000 தேங்காய் உபயோகப்படுத்தப்பட்டால், அவற்றிலிருந்து முறையே 2000 லிட்டர் தண்ணீர் வெளியில் வீணடிக்கப் படுகின்றது. இவை நீர்நிலைகளில் சென்றடையும்போது உயிரி சார்ந்த பிராணவாயு தேவையை 3,60,000 மிகி அளவு அதிகரித்து, சுகாதார மற்றும் சுற்றுச்சூழல் சீர்கேட்டை விளைவிக்கின்றது. நுண்ணூட்டச் சத்துக்கள் மற்றும் சர்க்கரைச் சத்துக்கள் நிரம்பிய தேங்காய் தண்ணீர் வெளியில் கொட்டப்படாமல் இருக்க வேண்டுமானால் அதை மதிப்புக் கூட்டுவதற்கான வழிமுறைகளை கண்டறிய வேண்டும். 100மி. தேங்காய் தண்ணீரில் 4-5 டிகிரி பிரிக்ஸ் மொத்த சர்க்கரை அளவு உள்ளது. மேலும் பல உயிர்சத்து மற்றும் வளர்ச்சி ஊக்கிகள் இதில் உள்ளதால் நுண்ணுயிர் வளர்ப்பதற்கு தண்ணீரை உபயோகித்து, அதில் நுண்ணுயிர் நொதித்தல் மூலமாக நார்ச்சத்து மிகுந்த ஒரு வகையான ஜெல்லி உணவை தயாரிக்க முடியும். இவ்வாறாக செய்யப்படும் உணவு

வகையை நுண்ணுயிர் நார்மப்பொருள் (மைக்ரோபியல் செல்லுலோஸ்) என்றும் நாட்டா-டி-கோக்கோ எனவும் அழைப்பர். இவ்வகை நார்மப்பொருள் உணவு அதிக நார்ச்சத்து உள்ளதால் மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றுள்ளது.

**நார்மப்பொருள் சுரக்கும் பாக்டீரியா - அசிட்டோபேக்டர் சைலினம்:**

மைக்ரோ பியல் நார்மப்பொருளின் முக்கியத் துவத்தை கருத்தில் கொண்டு நுண்ணுயிரியல் துறை, தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம், கோவையில் தேங்காய் தண்ணீரை மதிப்புக்கூட்டி நார்மப் பொருள் உற்பத்தி செய்யும் அசிட்டோபேக்டர் சைலினம் என்னும் நுண்ணுயிர் பிரித்தெடுக்கப்பட்டு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**பாக்டீரியல் நார்மப் பொருள் தயாரிக்கும் முறை:**

1.0 லி தேங்காய் தண்ணீரை சுத்தமாக வடிகட்டி எடுத்துக் கொள்ள வேண்டும். இதில் 15 விழுக்காடு சர்க்கரையை சேர்த்து நன்கு கலக்கியபின் 5 விழுக்காடு அம்மோனியம்சல்பேட் உப்பை கலக்கவும். பின் கார அமிலத் தன்மை 5.0 ஆக அசிட்டிக் அமிலம் கொண்டு சரிசெய்ய வேண்டும். இவ்வாறாக தயாரித்த கரைசலை அகண்ட வாய்கொண்ட புட்டியில் நிரப்பி, பஞ்சு கொண்டு?அடைத்து அதனை தொற்றுநீக்கம் (பாஸ்சரைஸ்) செய்ய வேண்டும். நன்கு ஆறியவுடன் அதனோடு 10 விழுக்காடு அ.சைலினம் பாக்டீரியாவை கலந்து அறை வெப்பத்தில் 14 நாட்களுக்கு அப்படியே ஆட்டாமல் அசைக்காமல் நிலையாக ஒரு இடத்தில் வைத்தல் அவசியமாகும். 14 நாட்களுக்கு பிறகு சுமாராக 1-2 செ.மீ. அளவுக்கு கெட்டியான பால் ஆடை போன்று நார்மப்பொருள் உற்பத்தியாகி மிதக்கும். இதுவே உணவு நார்ச்சத்து மிகுந்த பாக்டீரியல் செல்லுலோஸ்.

**பாக்டீரியல் நார்மப்பொருளை பதனிடும் முறை:**

உற்பத்தி செய்த பாக்டீரியல் நார்மப்பொருள், அமிலத் தன்மை கொண்டிருக்கும். அதனை அப்படியே சாப்பிட?முடியாது. அதை உட்கொள்வதற்கு ஏற்றவாறு மாற்ற வேண்டும். எனவே கரைசலில் மிதந்துகொண்டு வளரும் நார்மப்பொருளை எடுத்து பலமுறை நன்கு நீரில் அலச வேண்டும். பின் சிறிய துண்டங்களாக வெட்டி மீண்டும் குழாய் தண்ணீரில் நன்கு கழுவ வேண்டும். பின் அதை கொதிக்கும் தண்ணீரில் 15 நிமிடம் வேகவைக்க வேண்டும். இவ்வாறு செய்வதால் அதில் உள்ள அமிலத் தன்மை நீக்கப்பெற்று பாக்டீரியாவின் வாடையும் விலகுகின்றது. பின் தண்ணீரை நன்கு வடித்து எடுத்துவிட்டு சர்க்கரைப்பாகில் 5 நிமிடம் போட்டு கொதிக்கவிடவும். இதனுடன் சுவைக்காகவும் வாசனைக்காகவும் பைன் ஆப்பிள் எசென்ஸ் கலந்துகொள்ளலாம். பின் அதனை ஒரு சுத்தமான புட்டியில் அடைத்துவைத்து உபயோகித்துக் கொள்ளலாம். இது ஆறு மாத காலம் வரை கெடாமல் இருக்கும். 1.0 லி. தேங்காய் தண்ணீரில் இருந்து சுமார் 400கி நார்மப்பொருள் உற்பத்தி செய்யலாம். இவை யாவும் இந்திய சந்தையில் ஒரு

கிலோ ரூ.70/- என விற்கப்படுகின்றது.

இதை உற்பத்தி செய்வதற்கான செலவுகள் மிகக்குறைவே. சுமார் 1 கி.கி. தயார் செய்வதற்கு ஆகும் இடுபொருள் செலவு ரூ.30/- மட்டுமே. இதற்கான தொழில் தொடங்கும் வழிமுறைகளை தென்னை மேம்பாட்டு வாரியம், கொச்சி, கேரளா-682 011 வழங்குகிறது.

**முனைவர் க.கோபாலசுவாமி,**
**பேராசிரியர்,**
**கு.காயத்ரி, ஆராய்ச்சி மாணவி,**
**வேளாண் நுண்ணுயிரியல் துறை,**
**தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்,**
**கோயம்புத்தூர்-641 003.**

26th Sep 20012 | சின்னச்சின்ன செய்திகள்



மரம் வளர்ப்பு - "மலைவேம்பு' - வடிகால் வசதி கொண்ட அனைத்து நிலங்கள், மணல் கலந்த வண்டல் மண் ஏற்றது. 15 அடி இடைவெளி தேவை. ஏக்கருக்கு 200 கன்றுகள். அறுவடைக்காலம் 7 ஆண்டுகள். 3ம் ஆண்டில் தீக்குச்சி, 4ம் ஆண்டில் பிளைவுட், 7ம் ஆண்டுக்கு மேல் மரப்பொருட்கள் தயாரிக்கலாம். வருமானம் ஏக்கருக்கு 7 லட்சம் ரூபாய்.

**குமிழ்:**

வடிகால் வசதி கொண்ட ஆழமான மண் கண்டம் உள்ள அனைத்து வகையான மண்ணிலும் வளரும். 15 அடி இடைவெளியில் நடுவதற்கு ஏக்கருக்கு 200 கன்றுகள் தேவைப்படும். அறுவடைக் காலம் 8 ஆண்டுகள். கதவு, நிலை, ஜன்னல், மரப்பொருட்கள் தயாரிக்க பயன்படும். உத்தேச வருமானம் 14 லட்சம் ரூபாய்.

**சந்தன மரம்:**

உவர்நிலம் அல்லாத மண் கண்டம் உள்ள நிலங்கள் வேம்பு வளரும் நிலங்கள் அனைத்தும் சந்தனத்திற்கும் ஏற்றவை. 16 அடி இடைவெளியில் நடவும். ஏக்கருக்கு 200 கன்றுகள் தேவை. அறுவடை செய்ய குறைந்தபட்சம் 25 ஆண்டுகள் காத்திருக்கவும். வாசனைப் பொருட்கள், மரச்சாமான்கள், சிற்பங்கள் செய்ய உகந்தது. உத்தேச வருமானம் ஏக்கருக்கு ஒரு கோடி.

**மூங்கில்:**

செம்மண் இருமண்பாடு நிலங்கள் ஏற்றவை. மற்ற நிலங்களில் குழிக்குள் செம்மண் இட்டு நடலாம். 15 அடி இடைவெளியில் நடவு செய்ய ஏக்கருக்கு 200 கன்றுகள் தேவை. அறுவடை 5 ஆண்டுகளுக்குப் பிறகு, கட்டட வேலை, காகித ஆலைப் பயன்பாட்டுக்கு தேவை. உத்தேச வருமானம் ஏக்கருக்கு ஒரு லட்சம் ரூபாய்.

**சவுக்கு:**

மணல், வண்டல்மண், செம்மண் நிலங்கள் ஏற்றவை. 4 அடி இடைவெளியில் நடுவதற்கு ஏக்கருக்கு 4000 கன்றுகள் தேவைப்படும். 3 ஆண்டுகளுக்குப்பின் அறுவடைக்கு தயாராகும். உபயோகம் - கட்டிட வேலை, எரிபொருள், காகிதக்கூழ் ஆகியவை. வருமானம் ஏக்கருக்கு 80 ஆயிரம் ரூபாய்.

**தேக்கு:**

நல்ல வடிகால் வசதி கொண்ட ஆற்று வண்டல் மண் மற்றும் மணற்பாங்கான செம்மண் நிலங்கள் ஏற்றவை. 6 அடி இடைவெளிவிட்டு நடவு செய்ய ஏக்கருக்கு 1000 கன்றுகள் தேவை. அறுவடைக்காலம் 25 ஆண்டுகள். 7 மற்றும் 12ம் ஆண்டுகளில் மரங்களை கலைத்துவிட வேண்டும். மரப்பொருட்களைத் தயாரிக்கலாம். வருமானம் ஏக்கருக்கு 25 லட்சம் ரூபாய்.

**கூட்டு மீன் வளர்ப்பில் கூடுதல் லாபம் தரும் "கோ? மீன்':**

ஆறு வகையான வேக வளர்ச்சிக் கெண்டைகள் கூட்டு மீன் வளர்ப்பில் உரிய இருப்படர்த்தியிலும் சரியான இன விகிதங்களிலும் இருப்புச் செய்து வளர்க்கப்படுகின்றன. இம்முறை வளர்ப்பில் நீரின் மேல் மட்டத்திற்கென்றும், நடுமட்டத்திற் கென்றும் அடிமட்டத்திற் கென்றும் தக்க இயல்புகளைக் கொண்ட மீனினங்கள் தேர்வு செய்து வளர்க்கப் படுகின்றன. கோய் கெண்டை, சாதாக் கெண்டையின் அன்மை உறவென்பதால் குளத்தின் அடிமட்டத்தில் வாழும் சாதக் கெண்டைக்குப் பதிலாக கோய் கெண்டையைக் கூட்டுமீன் வளர்ப்பில் இருப்புச்செய்து வளர்க்கலாம். கோய்க் கெண்டைகள் அலங்காரமா னவை. வண்ண மயமானவை. கண்ணைக் கவர்பவை. அழகை விரும்புவோர் ஆராதனை செய்பவை. இத்தகைய கோய் கெண்டைகளுக்கான தேவை அதிகமானால் மீன்வளர்ப்புக் குளத்தில் அடிமட்டத்தில் இருப்புச் செய்வதற்கான 40 சதம்

கோய் மீன்களை வளர்த்து பயன்பெறலாம். உள்நாட்டுத் தேவை மற்றும் ஏற்றுமதிக்கான கோய் மீன்களின் உற்பத்தியும் உறுதியாகும். உணவுக்காகும் கெண்டை மீன்களான கட்லா, ரோகு, மிர்கால், வெள்ளி, புல் மற்றும் சாதாக்கெண்டைகளை வளர்க்கும் குளத்தில் கிடைக்கும் நிகர வருமானத்தைவிட கோய் வளர்ப்பின் மூலம் கிடைக்கும் லாபம் அதிகமானது. கோய் என்னும் அலங்கார மீன் வளர்ப்பில் அறிவியல் தொழில் நுட்பங்களை திறம்பட அறிந்து, மிகத் தீவிர கோய் வளர்ப்பில் ஊக்கமுடன் ஈடுட்டால் அமோகமான லாபத் தினை அடையலாம். (தகவல்: முனைவர் வே.சுந்தரராஜ், முன்னாள் முதல்வர், மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தூத்துக்குடி. 90030 13634)

**-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்**

26th Sep 20012

## செம்மறி ஆடு வளர்ப்பில் தீவனத்தின் பங்கு



**ஊட்டச்சத்துக்களின் தேவை:**

**அ)புரதச்சத்தின் தேவை:**

ஆடுகளின் கம்பள மயிர் அதாவது கிராட்டின் எனப்படும் முழுப்புரதம் மொத்தமும் புரதத்தால் ஆனவை. எனவே புரதச் சத்தின் தேவை செம்மறி ஆடுகளில் கொஞ்சம் அதிகமாகவே காணப் படுகிறது. புரதமில்லா நைட்ரஜன் சத்து பொருள்களை அசையும் இரைப்பையில் நல்ல தரம் மிக்க நுண்ணுயிர் புரதமாக மாற்றும் தன்மை செம்மறி ஆடுகளில் உள்ளது.

கம்பள மயிர்களில் சிஸ்டைன் மற்றும் மெத்தியோனைன் ஆகிய இரண்டு அமினோ அமிலங்களும் அதிக அளவில் காணப்படும். அன்றாடத் தேவையான இவ்விரு அமினோ அமிலங்களையும் தினசரி கொடுக்கப்படும் தீவனமே சரிபார்த்துக்கொள்ளும். இருப்பினும் ஒரு வேளை ஆடுகளின் தீவனத்தில் எதிர்பாராமல் சிஸ்டடன் பற்றாக்குறை ஏற்பட்டால், இவ்விரு அமினோ அமிலங்கள் அதிகமாக உள்ள புரத உபபொருட்களை தீவனத்தில் கலப்பது நன்மை பயக்கும். தோராயமாக

நாள் ஒன்றுக்கு நிலைகாப்புக்காக தேவைப்படும் புரதச் சத்தின் அளவு ஒரு கிலோ உயிர் எடைக்கு ஒரு கிராம் செரிமான கச்சா புரதம் வீதம் ஆகும். இந்த ஒரு கிராம் புரதமானது சினைப்பருவ காலங்களில் 50 விழுக்காடுகள் வரையிலும் வளர்ச்சி மற்றும் கறவை காலங்களில் 100 விழுக்காடுகள் வரையிலும் அதிகமாகும்.
புரதச்சத்து பற்றாக்குறை ஏற்பட்டால் ஆடுகளின் உணவு உண்ணும் அளவு குறையும். தீவன மாற்றுத்திறன் குறையும். உடல் மற்றும் தசை வளர்ச்சி குறையும். இனவிருத்தி திறன் குறையும். கடைசியாக கம்பள மயிர் உற்பத்தியும் குறைந்துவிடும்.

**ஆ. எரிசக்தி அல்லது மொத்த செரிமான சத்துக்களின் தேவை:**
செம்மறி ஆட்டுக்குட்டிகளுக்கு மொத்த செரிமான சத்துக்களின் தேவை பருவமடைந்த ஆட்டைவிட அதிகமாகும். அதுபோல, சினை ஆடுகள் இனப்பெருக்கத்திற்கான பெட்டை செம்மறி ஆடுகள் மற்றும் கறவை ஆடுகளுக்கு சினையில்லா மற்றும் கறவையில்லா பெட்டை ஆடுகளைவிட அதிகளவு எரிசக்தி தேவைப்படும். அடிப்படையாக ஒரு சினையில்லா மற்றும் கறவையில்லா பெட்டை ஆட்டுக்கு நாள் ஒன்றுக்கு ஒரு கிலோ உயிர் எடைக்கு10 கிராம் மொத்த செரிமான சத்துக்கள் வீதம் தேவைப்படும்.

**இ. கொழுப்புச்சத்தின் தேவை:**
செம்மறி ஆடுகளின் தீவனத்தை குறைந்தபட்சம் 3 விழுக்காடுகள் கொழுப்புச்சத்து இருப்பது அவசியமாகும். பொதுவாக ஆடுகளின் அடர்தீவனத்தில் 5 விழுக்காடுகள் வரை கொழுப்பு சேர்க்கப் படுகிறது. உருக்கப்பட்ட மாட்டின் கொழுப்பு தவிட்டு எண்ணெய், சோயா எண்ணெய் போன்ற கொழுப்புச்சத்து தீவனப்பொருட்கள் அடர்தீவனத்தில் கலக்கப்படுகிறது.

**ஈ. தாது உப்புக்களின் தேவை:**
பொதுவாக செம்மறி ஆடுகளுக்கு 15 தாது உப்பு வகைகள் தேவை என கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அவைகளுள் மிக முக்கியமானவை சோடியம், குளோ ரைடு, சுண்ணாம்பு, மணிச்சத்து, மெக்னீசாம்பல் சத்து மற்றும் சல்பர் ஆகும்.

**உ. உப்பு:**
செம்மறி ஆடுகள் பசுமாடுகளைவிட அதிகளவு உப்பு உட்கொள்ளும். எந்தவகை பண்ணை மேலாண்மை செய்முறையானாலும் தினசரி உப்பு கொடுப்பதை ஒரு அடிப்படை நியதியாக பின்பற்ற வேண்டும். பொதுவாக முழுமைத் தீவன மாயின் 0.5 சதவீதம் அல்லது அடர் தீவனமாயின் ஒரு சதவீதம் என்ற விகிதத்தில் உப்புச்சத்தை சேர்க்க வேண்டும். (தகவல்: முனைவர் ப.வாசன், இணை பேராசிரியர், கால்நடை மருத்துவக் கல்லூரி, ஒரத்தநாடு. 94446 94530)
**-கே.சத்தியபிரபா, உடுமலை.**

26th Sep 20012

## அதிக கையிருப்பால் மஞ்சள் விலை உயர வாய்ப்பில்லை



கொச்சி:மஞ்சள் கையிருப்பு மிகவும் அதிகமாக இருப்பதால், மஞ்சள் விலை உயர வாய்ப்பில்லை என, இத்துறையைச் சேர்ந்த ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

**சாகுபடி பரப்பளவு:**வரும் பருவத்தில், மஞ்சள் சாகுபடி பரப்பளவு, நடப்பு பருவத்தை விட, 35-40 சதவீதம் சரிவடையும் என, எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையிலும், இதன் விலை உயராது என்றும், வரும் 2013ம் ஆண்டு, ஜூலை மாதத்திற்கு பிறகே, மஞ்சள் விலையில் மாற்றம் ஏற்பட வாய்ப்புள்ளது என, மஞ்சள் வர்த்தகர் ஒருவர் தெரிவித்தார்.

வரும் 2012-13ம் பருவத்தில், மஞ்சள் உற்பத்தி, 50 லட்சம் மூட்டைகள் என்ற அளவில் குறைவாகத்தான் இருக்கும். இதன் உற்பத்தி, நடப்பு 2011-12ம் பருவத்தில், 90 லட்சம் மூட்டைகளாக உள்ளன.மஞ்சள் அதிக அளவில் உற்பத்தியாகும் ஆந்திராவில், காலம் தவறிய மழைப் பொழிவால், இதன் சாகுபடி 18-20 சதவீதம் குறைந்துள்ளது.

**மாற்று பயிர்:**மஞ்சளுக்கான தேவை போக, 30-35 லட்சம் மூட்டைகள் கையிருப்பில் உள்ளதால், இதன் விலை உயர வாய்ப்பில்லை. குறிப்பாக, உள்நாடு மற்றும் ஏற்றுமதி உட்பட மஞ்சளுக்கான தேவை 65-75 லட்சம் மூட்டைகள் என்ற அளவில் உள்ளது.கடந்த 2010ம் ஆண்டு நவம்பர் மாதத்தில், ஒரு குவிண்டால் மஞ்சள் விலை, வரலாறு காணாத அளவிற்கு, 16,350 ரூபாயாக மிகவும் அதிகரித்திருந்தது.

ஆனால், அதன் பின், இதன் விலை 80 சதவீதம் சரிவடைந்து, ஒரு குவிண்டால், 3,360 ரூபாயாக மிகவும் வீழ்ச்சி கண்டது.மஞ்சள் விலை சரிவால், பல விவசாயிகள், பருத்தி, மரவள்ளி மற்றும் சோயா உள்ளிட்ட மாற்று பயிர் சாகுபடிக்கு மாறிஉள்ளனர்.தற்போது, நடப்பு சந்தையில், ஒரு குவிண்டால் மஞ்சள் விலை, 5,500-5,700 ரூபாய் என்ற அளவில் உள்ளது. கடந்த 2011-12ம் நிதியாண்டில், 79,500 டன் மஞ்சள் ஏற்றுமதியானது. இது, அதற்கு முந்தைய ஆண்டை விட, 61

சதவீதம் அதிகமாகும்.

**தேவை:**இது குறித்து, முன்பேர வர்த்தக சந்தையைச் சேர்ந்த ஆய்வாளர் ஒருவர் கூறுகையில்,"வரும் பருவத்தில், நாட்டின் மஞ்சள் உற்பத்தி 20 சதவீதம் குறைந்து, 10 லட்சம் டன்னாக இருக்கும். உள்நாடு மற்றும் ஏற்றுமதிக்கான தேவை குறைந்துள்ளதால், இதன் விலை, உடனடியாக உயர வாய்ப்பில்லை' என்று தெரிவித்தார்.

25th sep 2012 P.M

26th Sep 20012

## கரீப் பருவ தானிய உற்பத்தி12 கோடி டன்னாக குறையும்:வேளாண் அமைச்சர் சரத்பவார் தகவல்



புதுடில்லி:நடப்பாண்டு கரீப் பருவத்தில் (ஜூலை - அக்டோபர்), நாட்டின் உணவு தானிய உற்பத்தி, 11.72 கோடி டன்னாக சரிவடையும் என, மத்திய வேளாண் அமைச்சர் சரத்பவார் தெரிவித்தார். கடந்த ஆண்டு, இதே பருவத்தில், தானிய உற்பத்தி, 12.99 கோடி டன்னாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

எண்ணெய் வித்துக்கள்:இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:உள்நாட்டில், நெல், எண்ணெய் வித்துக்கள், பருப்பு வகைகள் உற்பத்தியாகும், பல மாநிலங்களில், பருவம் தவறிய மழைப்பொழிவாலும், குறைந்த அளவு மழை பெய்ததாலும் தானிய உற்பத்தி, 11.72 கோடி டன்னாக குறையும்.இதில், நெல் உற்பத்தி, கடந்த ஆண்டு, கரீப் பருவத்தை விட, நடப்பு பருவத்தில், 6.5 சதவீதம் குறைந்து, 9.15 கோடி டன்னிலிருந்து, 8.56 கோடி டன்னாக சரிவடையும். சென்ற ஜூலை மாதத்தில், ஒரு சில மாநிலங்களில், மழைப் பொழிவு மிகவும் குறைந்திருந்தது. ஆனால், ஆகஸ்ட் மாதத்தின் பிற்பகுதியில், மழை அளவு அதிகரித்ததை அடுத்து, விவசாயிகள், சாகுபடி பரப்பளவை அதிகரித்துள்ளனர்.

இதனால், ஒட்டுமொத்த அளவில், தானிய உற்பத்தி மேம்படும் என, எதிர்பார்க்கப்படுகிறது.

நடப்பு கரீப் பருவத்தில், பருப்பு வகைகள் உற்பத்தி, 52.60 லட்சம் டன்னாக குறையும் என, மதிப்பிடப்பட்டுள்ளது.
இது, கடந்த ஆண்டு, இதே பருவத்தில், 61.60 லட்சம் டன்னாக இருந்தது. இருப்பினும், துவரை உற்பத்தி, 26.50 லட்சம் டன்னிலிருந்து, 27.80 லட்சம் டன்னாக உயரும் என, எதிர்பார்க்கப்படுகிறது.அதேசமயம், உளுந்து உற்பத்தி, 12.80 லட்சம் டன்னிலிருந்து, 11.40 லட்சம் டன்னாகவும், மக்காச்சோளம் உற்பத்தி, 1.62 கோடி டன்னிலிருந்து, 1.49 கோடி டன்னாகவும் குறையும் என, மதிப்பிடப்பட்டுள்ளது.ஒட்டுமொத்த அளவில், எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி, 1.88 கோடி டன்னாக இருக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது. இதில், சோயா வித்துக்கள் உற்பத்தி, 1.26 கோடி டன்னாக உயர வாய்ப்புள்ளது.
அதேசமயம், நிலக்கடலை உற்பத்தி, 38 லட்சம் டன்னாக சரிவடையும். இது, கடந்த ஆண்டு, இதே பருவத்தில், 50.90 லட்சம் டன்னாக இருந்தது.இதே கரீப் பருவத்தில், ஆமணக்கு உற்பத்தி, 23 லட்சம் டன்னிலிருந்து, 14 லட்சம் டன்னாக குறையும்.நடப்பு கரீப் பருவத்தில், பருத்தி உற்பத்தி, 334 லட்சம் பொதிகளாக (ஒரு பொதி=170 கிலோ) குறையும். கடந்த ஆண்டு, இதே பருவத்தில், இதன் உற்பத்தி, 352 லட்சம் பொதிகளாக இருந்தன.கரும்பு:கரும்பு உற்பத்தி, 35.77 கோடி டன்னிலிருந்து, 33.53 கோடி டன்னாக குறையும்.நடப்பு கரீப் பருவத்தில், தானிய உற்பத்தி குறையும் என்றாலும், ரபி பருவத்தில் (அக்., - மார்ச்), நாட்டின் தானிய உற்பத்தி அதிகரிக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே, நடப்பு முழு பருவத்தில் (ஜூலை - ஜூன்), நாட்டின் உணவு தானிய உற்பத்தியில், முன் னேற்றம் ஏற்படும். இவ்வாறு அமைச்Œர் தெரிவித்தார்.

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

25.09.2012 P.M

26.09.2012 A.M

| 26th Sep 20012 | அன்னிய நேரடி முதலீடு மூலம் வேளாண் துறைக்கே அதிக பலன் |
|---|---|

மும்பை, செப். 25: சில்லறை வணிகத்தில் அன்னிய நேரடி முதலீட்டை அனுமதிக்கும் முடிவினால் வேளாண் துறைதான் மிகப் பெரிய பலனை அடையப் போகிறது என மத்திய நகர்ப்புற மேம்பாட்டுத் துறை அமைச்சர் கமல்நாத் (படம்) மும்பையில் செவ்வாய்க்கிழமை கூறியிருக்கிறார். மும்பையில் அகில இந்திய நிர்வாகவியல் சங்கத்தினரின் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அவர் பேசியது: இப்போது உற்பத்தியாகும் காய்கறிகளில் ஏறத்தாழ நாற்பது சதவீதம் சரியான பாதுகாப்பு இல்லாமல் அழுகிப் போகிறது. பல பொருள் சில்லறை விற்பனையில் அன்னிய நேரடி முதலீடு என்பதில் உள்ள இடர்பாடுகளைக் காட்டிலும் அதிலுள்ள சாதகமான விஷயங்கள் ஏராளம்.

குளிரூட்டப்பட்ட கிடங்கு வசதிகள், கொள்முதல் முறைகள், விற்பனைப் பொருள்களில் ஒரே சீரான தரத்தை உறுதி செய்தல் போன்ற அம்சங்கள் முக்கியமாக நமது வேளாண் துறையைச் சேர்ந்தவர்களுக்குத் தான் நல்ல பலன்களைப் பெற்றுத் தரும்.

பெரிய வணிகர்கள் அன்னிய நேரடி முதலீட்டுடன் தங்கள் கடைகளைத் திறந்தால் அவர்கள் சிறு வியாபாரிகளை விழுங்கிவிடுவார்கள் என்று கூறப்படுவது அடிப்படையற்றது. அன்னிய நேரடி முதலீடு என்பது பிரச்னையல்ல. அப்படிக் கூறுவது தவறானது. இப்போது அறிவிக்கப்பட்டுள்ள விதிமுறைகளின்படி இந்தியாவில் 21 நகரங்களில்தான் இது போன்ற அன்னிய நேரடி முதலீட்டில் பெரும் வணிக நிறுவனங்கள் கடை தொடங்கலாம்.

இவற்றுடன் போட்டியிட்டு சிறு மற்றும் நடுத்தர கடைகளும் வணிகம் செய்ய முடியும். வாடிக்கையாளர்கள், அருகில் இருக்கும் சிறு கடைகளை விட்டுவிட்டு தொலைவில் உள்ள ஒரு பெரிய கடைக்குப் பொருள் வாங்கச் செல்வார்கள் என எனக்குத் தோன்றவில்லை. அப்படி ஒரு வாடிக்கையாளர் செய்தால் அதற்கு நல்ல காரணமிருக்க வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

25th sep 2012 P.M

| 25th Sep 20012 | திருவண்ணாமலை<br>திறன் வளர்ப்புப் பயிற்சி தொடக்கம் |
|---|---|

திருவண்ணாமலை, செப். 24: திருவண்ணாமலை மாவட்ட வேளாண் துறையின் நீர்வள நிலவளத்துறை அலுவலர்களுக்கான 2 நாள் திறன் வளர்ப்புப் பயிற்சி முகாம், திங்கள்கிழமை தொடங்கியது.

இப் பயிற்சி முகாமை, மாவட்ட வேளாண் இணை இயக்குநர் சக்கரவர்த்தி தொடங்கி வைத்துப் பேசினார்.

சென்னை திறன் வளர்ப்புப் பயிற்சி ஆலோசகர்கள் பால்ராயன், பி.தங்கமணி ஆகியோர் வேளாண் அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கின்றனர்.

தொடக்க விழாவில், வேளாண் உதவி இயக்குநர்கள் அகண்டராவ், ரமணன், ஏ.பாலா, சிவக்குமார், வேளாண் அலுவலர்கள் சுந்தரமூர்த்தி, பிரபு மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

25.09.2012 P.M

26.09.2012 A.M

26th Sep 20012

## நுண்ணூட்டச்சத்து பற்றாக்குறையால் மஞ்சள் பயிரில் நோய் தாக்குதல் கட்டுப்படுத்த விவசாயிகளுக்கு யோசனை

பாலக்கோடு, : தர்மபுரி மாவட்டத்தில் பல ஆயிரம் ஏக்கரில் மஞ்சள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தற்போது மஞ்சள் பயிரில் நுண்ணூட்டச்சத்து பற்றாக்குறை ஏற்பட்டு விளைச்சல் பாதிப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளதாக தோட்டக்கலைத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதுகுறித்து பாலக்கோடு தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் பாஸ்கர் கூறியதாவது: நுண்ணூட்டச்சத்து குறைபாடு ஏற்பட்டால் மஞ்சள் பயிரின் இலைகள் வெளிறிய நிறமாக மாறும். இதனால் ஒளிச்சேர்க்கை தடைபட்டு பயிரின் வளர்ச்சி பாதிக்கும். கிழங்கு மகசூல் வெகுவாக பாதிக்கும். இதனை கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு 6 கிலோ சூப்பர் பாஸ்பேட் உரத்தை 10 லிட்டர் தண்ணீரில் இரவு முழுவதும் ஊற வைக்க வேண்டும். இடையில் 3 முறை கலக்கி விட வேண்டும். மறுநாள் தெளிந்த கரைசலை வடிகட்டி அதனுடன் பெர்ரஸ் சல்பேட் 150 கிராம், ஜிங்க் சல்பேட் 150 கிராம், மக்னீசியம் சல்பேட் 150 கிராம், யூரியா 150 கிராம் மற்றும் போரக்ஸ் 150 கிராம் கலந்து ஒரு ஏக்கருக்கு தேவையான தண்ணீரில் கலந்து காலை நேரத்தில் தெளிக்க வேண்டும். இதன்மூலம் நுண்ணூட்டச்சத்து பற்றாக்குறையை நீக்கி மகசூல் இழப்பை தவிர்க்கலாம். மேலும், மஞ்சளில் இலைப்புள்ளி நோய் தாக்கவும் வாய்ப்புள்ளது. இதனை கட்டுப்படுத்த நோய் தாக்கிய இலைகளை சேகரித்து அழிக்க வேண்டும். மேலும், ஒரு லிட்டர் நீரில் மான்கோசெப் எம் அல்லது கார்பன்டாசிம், அல்லது ஆக்சிளோரைடு, சூடோமோனாஸ் புளோரசன்ஸ் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றை நீருடன் கலந்து தெளிக்க வேண்டும். இதன் மூலம் மஞ்சள் பயிரில் அதிக மகசூல் எடுக்கலாம்.

இவ்வாறு தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் பாஸ்கர் தெரிவித்துள்ளார்.

| 25th Sep 20012 | தாந்தோணியில் விதை உற்பத்தியாளர்களுக்கு பயிற்சி |
|---|---|

கரூர், :கரூர் மாவட்டம் தாந்தோணி வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் விதைச்சான்று துறையின் சார்பில் அரசு விதை உற்பத்தியாளர்களுக்கு பயிற்சி நடைபெற்றது. மாவட்ட விதை ஆய்வு துணை இயக்குநர் ரங்கராஜன் தலைமை வகித்தார்.

கரூர் மற்றும் தாந்தோணி வட்டார வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, வேளாண் வணிகத்துறை, மண்பரிசோதனை, விதைபரிசோதனை நிலைய அலுவலர்கள் மற்றும் ஆத்மா திட்ட அலுவலர்கள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

பயிற்சியில் விதைச்சான்று துறையின் முக்கியத்துவம் குறித்து துணை வேளாண்மை இயக்குநர் (மத்திய திட்டம்) சவுந்திரம், துணை வேளாண்மை இயக்குநர் (மாநில திட்டம்) சுப்ரமணியன், துணை வேளாண்மை இயக்குநர் (தோட்டக்கலைத்துறை) சதாசிவம் ஆகியோர் பேசினர்.

விதைத்தரத்தின் முக்கியத்துவம் குறித்தும், பயிற்சியின் அவசியம் மற்றும் விதைப்பண்ணை பதிவு செய்தல் குறித்தும் கரூர் விதைச்சான்று உதவி இயக்குநர் சேகர் பேசினார்.வயலாய்வு, விதைப்பண்ணை தள்ளுபடி மற்றும் சிறப்பு அனுமதி வழங்குதல் பற்றி குளித்தலை விதைச்சான்று அலுவலர் தியாகராஜன் கூறினார்.

விதைப்பணி மற்றும் சான்றுப்பணி செய்தல் குறித்து கரூர் விதைச்சான்று அலுவலர் தண்டபாணி, விதைப் பரிசோதனையின் அத்தியாவசியம் குறித்து பேசினார். விதைபரிசோதனை நிலைய மேலாண்மை அலுவலர் ரமேஷ் பேசினர். குளித்தலை விதைச்சான்று அலுவலர் தியாகராஜன் நன்றி கூறினார்.

| 25th Sep 20012 | புரட்டாசி பட்டத்தில் பருத்தி சாகுபடி செய்தால் நல்ல லாபம் கிடைக்கும் ஏற்றுமதி சந்தை மைய இயக்குனர் அஜ்ஜன் தகவல் |
|---|---|

க.பரமத்தி, : புரட்டாசி பட்டத்தில் பருத்தி சாகுபடி செய்தால் அறுவடையின் போது நல்ல லாபம் பெறலாம் என்று உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மைய இயக்குனர் அஜ்ஜன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது,

கடந்த மார்ச் 2012 வரை நீண்ட இலை பருத்தியின் விலை குவிண்டாலுக்கு ரூ.3,800 முதல் ரூ.4,100 என இருந்தது. ஜூன் மாதம் முதல் விலை அதிகரிக்க தொடங்கியது.

மத்திய பிரதேசம், கர்நாடகா மற்றும் குஜராத்தில் பருத்தி சாகுபடி பரப்பு குறைந்ததால், அதிக

ஏற்றுமதியால் ஏற்பட்ட குறைந்த கையிருப்பும் மற்றும் இந்தியாவில் காலந்தாழ்ந்த குறைந்த பருவமழையும் அமெரிக்காவில் ஏற்பட்டுள்ள வறட்சி காரணமாக பருத்தியின் விலை அதிகரித்தது. பருத்தியின் விலை ஜூலை 2012 ல் அதிகபட்சம் குவிண்டாலுக்கு ரூ.5,500 என்ற நிலையில் இருந்தது.

உள்நாட்டு பருத்தி விலையானது சர்வதேச பருத்தி விலையை விட அதிகரித்திருந்தது.

உள்நாட்டில் இறக்குமதியாகும் பருத்தியின் விலையை விட 45 சதவீதம் அதிகமாகி இருப்பதால் நூற்பாலைகள் பஞ்சு இறக்குமதியில் ஆர்வம் காட்டின.

இந்தியா 2011,12 ம் ஆண்டில் 11.5 மில்லியன் லட்சம் பொதிகள் ஏற்றுமதி செய்ததால் கையிருப்பு குறைந்தது. இந்தியாவின் பருத்தி ஆண்டு தொடங்கிய முதல் 9 மாதத்தில் ஏற்றுமதி அதிகமாக இருந்தது. ஜூன் மாத இறுதி வரை சீனாவிற்கு அதிகம் ஏற்றுமதியானது அதன் பிறகு ஆப்பிரிக்கா மற்றும் பிரேசில் ஆகிய நாடுகளில் இருந்து குறைந்த விலைக்கு சீனா இறக்குமதி செய்ததால் இந்தியாவின் ஏற்றுமதி குறைந்தது.

இதற்கிடையே தமிழ்நாட்டில் புரட்டாசி பட்டம் (செப்டம்பர், அக்டோபர்) பருத்திக்கு ஒரு சிறப்பு பட்டமாகும் இந்த பட்டத்தில் பருத்தி சுவின் ரகம் பயிரிடப்படுகிறது. புரட்டாசி பட்டத்தில பருத்தி பயிரிடலாமா என்ற முடிவை விவசாயிகள் எடுக்க ஏதுவாக தேசிய வேளாண் புதுமை திட்டத்தின் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம் கொங்கணாபுரம் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் நீண்ட இலை பருத்தி விலையை ஆராய்ந்து வருகிறது. அறுவடையின் போது (ஜனவரி, பிப்ரவரி 2013) பருத்தியின் விலை குவிண்டாலுக்கு ரூ.4,200 முதல் ரூ.4,700 என இருக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது.

தேசிய மற்றும் சர்வதேச உற்பத்தியை பாதிக்கும் வர்க்கத்திற்கு மாறான வானிலை, அரசு ஏற்றுமதி மற்றும் இறக்குமதி கொள்கைகள் முன்னறிவிப்பு விலையில் மாற்றத்தை ஏற்படுத்தலாம். விவசாயிகள் புரட்டாசி பட்டத்தில் மேற்கூறிய விலையை அடிப்படையாக கொண்டு தகுந்த ரகங்களைப் பயிரிடும்படி சிபா ரிசு செய்யப்படுகின்றன.

இவ்வாறு ஏற்றுமதி சந்தை தகவல் மைய இயக்குனர் அஜ்ஜன் தெரிவித்துள்ளார்.

25th sep 2012 P.M

| 25th Sep 20012 | செப்.28ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம் |
|---|---|

திண்டுக்கல், : திண்டுக்கல் கலெக்டர் அலுவலகத்தில் வரும் 28ம் தேதி காலை 10.30 மணிக்கு விவசாயிகள் குறை தீர்க்கும்நாள் கூட்டம் நடைபெற உள்ளது.

கலெக்டர் வெங்கடாசலம் தலைமை வகிக்கிறார். இக்கூட்டத்தில் கடந்த மாதம் விவசாயிகள் அளித்த கோரிக்கை மனு மீது விவாதம் நடைபெற உள்ளது. பல்வேறு துறை அலுவலர்கள் பங்கேற்க உள்ள இக்கூட்டத்தில் விவசாயிகள் திரளாக கலந்து கொண்டு விவசாயம் தொடர்பான பிரச்னைகளை தெரிவிக்கலாம் என, மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

பணம் வைத்து சூதாடிய 8 பேர்

சுற்றிவளைப்பு

திண்டுக்கல், : லாட்ஜில் அறை எடுத்து தங்கி பணம் வைத்து சூதாடிய 8 பேரை போலீசார் கைது செய்தனர். திண்டுக்கல் வடக்கு இன்ஸ்பெக்டர் புகழேந்தி தலைமையில் போலீசார் பஸ் ஸ்டாண்ட் அருகேயுள்ள லாட்ஜில் சோதனை மேற்கொண்டனர்.

ஒரு அறையில் மேட்டுப்பட்டி, நாகல்நகர் பகுதிகளை சேர்ந்த நாகராஜ்(52), பாஸ்கரன்(31), ராதாகிருஷ்ணன்(37), தன்ராஜ்(46), திவ்யநாதன்(55) உள்பட 8 பேர் பணம் வைத்து சூதாடிக்கொண்டிருந்தனர். அவர்களை போலீசார் கைது செய்து ரூ.400ஐ பறிமுதல் செய்தனர்.

| 25th Sep 20012 | நவீன இயந்திரம் மூலம் நாற்றுநடும் பணி துவக்கம் |
|---|---|

உளுந்தூர்பேட்டை, : உளுந்தூர்பேட்டை அருகே மூலசமுத்திரம் கிராமத்தில் வேளாண்மை துறையின் சார்பில் திருந்திய நெல்சாகுபடி முறையில் இயந்திரத்தின் மூலம் நாற்றுநடும் பணி நடைபெற்றது. வேளாண்மை உதவி இயக்குனர் கருணாநிதி தலைமை தாங்கி நாற்றும் நடும் பணியை துவக்கி வைத்தார். பின்னர் அவர் பேசியபோது, இயந்திரத்தின் மூலம் நாற்று நடும் போது ஒரு ஏக்கருக்கு 2 கிலோ விதை அளவே போதுமானது. நாற்றுநட்டு 16 நாட்களில் நடவு செய்யப்படுகிறது. இந்த முறையின் மூலம் குறைந்த அளவு நெல்விதைகளே பயன்படுத்தப்படுகிறது. நாற்றாங்கால் பரப்பும் மிகக்குறைவானது. அதிகப்படியான வேர் வளர்ச்சி அடைவதுடன் குறைந்த அளவே நீர் தேவைப்படுகிறது. அதிக அளவு தூர்கட்டுதல், திரட்சியான கதிர்கள், ஆட்கள் குறைவு, குறைந்த மின்சக்தி வினியோகம் உபயோகப்படுகிறது.

அதிகப்படியான லாபம் மற்றும் அதிக மகசூல் கிடைப்பதால் திருந்திய நெல்சாகுபடி முறையில் இயந்திரத்தின் மூலம் நாற்றுநடும் பணிகள் உளுந்தூர்பேட்டை வட்டாரத்தில் முழுவீச்சில் நடைபெற்று வருகிறது. இந்த முறையினை பயன்படுத்துவது தொடர்பாக விவசாயிகளுக்கு சந்தேகங்கள் இருந்தால் உளுந்தூர்பேட்டை வேளாண்மை விரிவாக்க அலுவலகத்தை தொடர்பு கொண்டு தெரிந்துகொள்ளலாம் என்றார்.

25th Sep 20012

## வேளாண்மை துறை சார்பில் விவசாயிகளுக்கு அடையாள அட்டை

செஞ்சி, : வல்லம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் ரவீந்திரன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்பு திட்டத்தின் கீழ் வல்லம் வட்டாரத்தில் ஆதி திராவிடர் மற்றும் சிறு, குறு விவசாயிகள் விவரம் வருவாய்த்துறை மற்றும் வேளாண்மைத்துறையினரால் கணக்கிடப்பட்டு உள்ளது. இதன்படி வட்டாரத்தில் உள்ள 26 ஆயிரத்து 500 ஆதி திராவிடர் மற்றும் சிறு, குறு விவசாயிகள் அனைவருக்கும் வேளாண்மை துறை சார்பில் அடையாள அட்டை வழங்கப்படுகிறது. இந்த அட்டை ஒருங்கிணைந்த விவசாயிகள் கையேடு என வழங்கப்படும்.

இந்த கையேட்டில் விவசாயிகளின் நிலத்தின் மண் ஆய்வு முடிவுகள், பயிருக்கு செய்யப்படும் பரிந்துரைகள் வேளாண் மற்றும் சகோதரர் துறைகள் மூலமாக வழங்கப்படும் சலுகைகள் போன்றவை இடம் பெற்றிருக்கும். மேலும் அனைத்து விவசாயிகளுக்கும் தனித்தனி அடையாள அட்டை எண் கொடுக்கப்படும்.

இந்த அடையாள அட்டை எண் மற்றும் கையேடு பெறுவதற்கு பெயர், விலாசம், நிலவகை, சர்வே எண், சாகுபடி பரப்பு, பராமரிக்கப்படும் கால்நடை விவரங்கள், இயந்திரங்கள், பயிர் விவரம், பயிர் லாபம், வருடாந்திர வருமானம், தேவையான தொழில் நுட்பங்கள் போன்றவை சம்பந்தப்பட்ட விவசாயிகளால் பூர்த்தி செய்து 2 எண் பாஸ்போர்ட் புகைப்படம், குடும்ப அட்டை நகல் போன்றவற்றுடன் மண் மாதிரி மற்றும் மண் ஆய்வுக் கட்டணம் ரூ.20 வழங்க வேண்டும்.

ஒருங்கிணைந்த விவசாயிகள் கையேடு பெறுவதற்கான விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட ஆதி திராவிடர் மற்றும் சிறு குறு விவசாயிகள் கிராம பஞ்சாயத்து தலைவர்கள் அல்லது சம்பந்தப்பட்ட உதவி வேளாண்மை அலுவலர்களை தொடர்பு கொள்ள வேண்டும். இவ்வாறு அதில் அவர் கூறியுள்ளார்.

சிவகங்கை, : அட்மா திட்டத்தில் விவசாயிகளுக்கு தொழில்நுட்ப பயிற்சி அளிக்கப்படுகிறது. இதுகுறித்து வேளாண்மை இணை இயக்குநர் செல்லத்துரை கூறியதாவது:
மத்திய அரசு நிதியுதவியுடன் அட்மா திட்டம் சிவகங்கை மாவட்டத்தில் அனைத்து வட்டாரங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் விவசாயிகள் ஆலோசனை குழுக்கள் அமைக்கப்பட்டு அவர் களது ஆலோசனை அடிப்படையில் செயல்விளக்க திடல்கள், பட்டறிவு சுற்றுலா, தொழில்நுட்ப பயிற்சி ஆகியவை அளிக்கப்படுகின்றன. இதற்காக வட்டார அளவில் தொழில்நுட்ப மேலாளர், தொழில்நுட்ப வல்லுநர்கள் என இருவர் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும் இத்திட்டத்தில் பயன்பெற அந்தந்த வட்டார வேளாண்மை உதவி இயக்குநர்களை விவசாயிகள் தொடர்பு கொள்ளலாம். தொடர்பு கொள்ள வேண்டிய செல்போன் எண்கள்: சிவகங்கை தனபாலன் 9486781531, காளயைர்கோவில் மற்றும் இளையான்குடி ஜெயசீலன் டேவிட் 9443491034, மானாமதுரை மூர்த்தி 9629680237, திருப்புவனம் சுரேஸ்பாபு 9244202743, தேவகோட்டை வெள்ளைச்சாமி 9443013945, கண்ணங்குடி திருஞானம் 9944432627, சாக்கோட்டை மணிவண்ணன் 9442473786, கல்லல் கணேசன் 9443609582, திருப்புத்தூர் சர்மிளா 9865232649, சிங்கம்புணரி சிவகுமரன் 9443693549, எஸ்.புதூர் கண்ணன் 9442041737. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

இன்றைய வேளாண் செய்திகள்

26.09.2012 A.M

26th Sep 20012

## விளை நிலங்களை பாதுகாக்க அரசு சட்டம் கொ டு வரவே டும் பாகூரில் நடந்த விவசாயிகள் சங்க மாநாட்டில் கோரிக்கை

விளை நிலங்களை பாதுகாக்க அரசு சட்டம் கொ டு வரவே டும் என்று பாகூரில் நடந்த விவசாயிகள் சங்க மாநாட்டில் கோரிக்கை விட பட்டுள்ளது.

விவசாயிகள் சங்க மாநாடு

அகில இந்திய விவசாயிகள் சங்கத்தின் புதுச்சேரி பிரதேச 11–வது மாநாடு பாகூரில் நடைபெற்றது. மாநாட்டுக்கு தலைவர் நிலவழகன் தலைமை தாங்கினார். மாநாட்டு கொடியை ராமசாமி ஏற்றி வைத்தார். பொருளாளர் நாக பன் தொடக்க உரையாற்றினார். புதுவை மாநில செயலாளர் பத்மநாபன் ஆ டறிக்கை வாசித்தார். விவசாயிகள் தொழிலாளர் சங்க புதுவை மாநில செயலாளர் மணிபாலன் வாழ்த்துரை வழங்கினார்.

மாநாட்டில் உலகநாதன், ராமமூர்த்தி, ரத்தினவேல், தேவராசு உள்பட ஏராளமான விவசாயிகள் கலந்து கொ டனர்.

மாநாட்டில் கீழ்க ட தீர்மானங்கள் நிறைவேற்ற பட்டன. அவை வருமாறு:–

கையக படுத்த வே டும்

* புதுவை மாநிலத்தில் உள்ள விவசாய நிலத்தில் 65 சதவீதம் விளை நிலங்கள் குறைந்து விட்டது. இதனால் மாநில அளவில் 5 சதவீதம் விவசாய உற்பத்தி கிடைத்து வருகிறது. விளை நிலங்களை அதிகரிக்க அரசு அனுமதி பெறாத வீட்டு மனை பிரிவு நிலங்களை கையக படுத்த வே டும்.

* அரசு பொருளாதார ம டலத்துக்கு கையக படுத்த பட்ட இடத்தை வேளா உற்பத்திக்கு பயன்படுத்த வே டும். இதற்கு விளை நிலங்களை பாதுகாக்க அரசு சட்டம் கொ டு வரவே டும்.

பால் கொள்முதல் விலையை உயர்த்த வே டும்

* கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.3500 வழங்க வே டும்.

* புதுச்சேரி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் வழங்க வே டிய கரும்பு பாக்கி தொகை ரூ.45

கோடியை வட்டி டன் வழங்க வே டும்.

* பால் கொள்முதல் விலையை ரூ.25–ஆக உயர்த்தி வழங்கவே டும்.

வறட்சி மாவட்டமாக

அறிவிக்க வே டும்

* காரைக்காலுக்கு காவிரி ர் பெற அரசு நடவடிக்கை எடுக்க வே டும். காவிரி ர் காரைக்காலுக்கு வராததால் குறுவை மற்றும் சம்பா சாகுபடி செய்ய வாய் பு இல்லை. எனவே காரைக்காலை வறட்சி மாவட்டமாக அறிவித்து ஏக்கருக்கு ரூ.10ஆயிரமும், விவசாய தொழிலாளர் குடும்பத்துக்கு தலா ரூ.10ஆயிரமும் வழங்க வே டும்.

* காரைக்கால் பகுதியில் திட்டமிட்ட படி ஏரிகளை வெட்டி ர் ஆதாரத்தை பெருக்க வே டும்.

முன்னதாக பாகூர் கொம்யூன் குழு செயலாளர் முத்துலிங்கம் வரவேற்றார். முடிவில் விவசாயிகள் சங்க பாகூர் கொம்யூன் குழு தலைவர் சிவ பிரகாசம் நன்றி கூறினார்.

| 26th Sep 20012 | 1 கிலோ தக்காளி ரூ.5, பீன்ஸ் ரூ.12<br>காய்கறி விலை வீழ்ச்சியடைந்ததால் பொது மக்கள் மகிழ்ச்சி கிலோ கணக்கில் வாங்கிச்செல்கிறார்கள் |
|---|---|

வேலூரில் காய்கறி விலை வீழ்ச்சியடைந்தது. 1 கிலோ தக்காளி ரூ.5–க்கும், பீன்ஸ் ரூ.12–க்கும் விற்க படுவதால் பொது மக்கள் மகிழ்ச்சியோடு கிலோ கணக்கில் காய்கறிகளை வாங்கிச்செல்கிறார்கள்.

காய்கறி விலை வீழ்ச்சி

வேலூர் காய்கறி மார்க்கெட் மற்றும் உழவர் சந்தைகளில் காய்கறி விலை வீழ்ச்சியடைந்துள்ளது. வேலூர் நேற்று 1 கிலோ காய்கறியின் விலை ம், கடந்த 10 தினங்களுக்கு முன்பு 1 கிலோவின் விலை அடை புக்குறிக்குள்ளும் வருமாறு:–

தக்காளி–ரூ.5(12), சுரைக்காய்ரூ.4(8), முட்டைக்கோஸ்–ரூ7(10), கொத்தவரைரூ.10(16), பீட்ரூட்ரூ.10(14), கத்தரிக்காய்ரூ.12(20), வெ டைக்காய்–ரூ.12(20), பீன்ஸ்ரூ.12(24), கேரட்ரூ.14(20), புடலை–ரூ18(20), முருங்கை–ரூ.14(20), அவரைரூ.28(36), பெரியவெங்காயம்ரூ.13(18).

மேற்க ட காய்கறியை போல பல காய்கறிகளின் விலை ம் குறைந்துள்ளது.

அது பற்றி வேலூர் உழவர் சந்தை அலுவலர் ஒருவரிடம் கேட்டபோது அவர் கூறியதாவது:–

நல்ல விளைச்சல்

ஆந்திராவில் நல்ல மழை பெய்ததால் அங்கு தக்காளி மற்றும் காய்கறிகளின் விளைச்சல் அதிகரித்துள்ளது. அதுதான் விலை வீழ்ச்சியடைந்ததற்கு காரணமாகும். மேலும் இந்த மாதத்தில்

(புரட்டாசி) திருமணம் மற்றும் சுப நிகழ்ச்சிகள் எதுவும் நடைபெறாது என்பதால் காய்கறிகளுக்கு கிராக்கி குறைவுதான். பொதுமக்களும், வழக்கம் போல செயல்படும் ஓட்டல்காரர்கள் மட்டுமே வாங்கிச்செல்வதால் விலையில் ஏற்றம் இல்லை. இதே நிலை இன்னும் 1 மாதத்திற்கு டிக்கும்.

ரிழிவு நோய் உள்ளவர்கள் கொய்யாக்காய் சா பிட்டால் உடலில் சர்க்கரை கட்டு பாட்டுக்குள் இருக்கும் என்று கூறுகிறார்கள். அது சரிதானா? என்று தெரியவில்லை. ஆனால், அந்த கொய்யாக்காய் கூட கடந்த மாதம் கிலோ ரூ.48–க்கு விற்பனையானது. ஆனால் இன்றைய விலை ரூ.24 என்பது குறி பிடத்தக்கது. பொதுவாக சிறிய குடும்பத்தில் தினமும் பகல் உணவுக்கு 1/4 கிலோ காய்கறியை உபயோக படுத்துவார்கள். அதில் தற்போதைய மகிழ்ச்சி என்னவென்றால் அந்த 1/4 கிலோவும் ரூ.5–க்குள் முடிந்து விடுகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

தக்காளி மயம்

தக்காளி 1 கிலோ ரூ.5–க்கு விற்க படுவதால் நடுத்தர மக்கள் சா பிடும் பல ஓட்டல்களில் காலையில் தக்காளி சட்டினி, பகலில் தக்காளிகாய் கூட்டு, தக்காளி சாம்பார், தக்காளி ரசம், இரவில் ச பாத்திக்கு கூட தக்காளி சட்டினி, தக்காளி தொக்கு என்று தக்காளி மயமாக காண படுகிறது. அதுபோல பகலில் முட்டை கோஸ், பீன்ஸ் கூட்டு, பொறியலும் சுரைக்காய் கூட்டு போன்றவைதான் பெரும்பால ஓட்டல்களில் உணவுடன் பரிமாற படுகிறது.

மகிழ்ச்சி

உழவர் சந்தையில் 1/4 கிலோ, 1/2 கிலோ காய்கறி வாங்கிச்செல்பவர்கள்கூட தற்போது மகிழ்ச்சியோடு 1 கிலோ அளவிற்கு காய்கறிகளை வாங்கிச்செல்கிறார்கள்.